# North Grenville வட க்குகிரென்வில்

www.northgrenville.on.ca



லீட்ஸ் கரென்வில் பிராந்தியத்தில், மிக வேகமாக வளர்ச்சியடைந்து வரும் மாநகராட்சியாக உள்ள வட க்கு கரென்வில் பொருளாதார அபிவிருத்திஅடையும் பெரும் வாய்ப்பினைப் பெற்று நிற்கின்றது. ஜோன்ஸ்ரவுனிலுள்ள (Johnstown) ஐக்கிய அமெரிக்க எல்லைப்புறத்திலிருந்தும், ஒட்டாவா மற்றும் சர்வதேச விமான நிலையத்திலிருந்தும் 20 நிமிடப் பயணத் தூரத்தில் முக்கியமான கேந்திர ஸ்தலத்தில் இந்த மாநகராட்சி அமைந்திருக்கின்றது. உயிர்த்துடிப்புடைய இந்த சமூகம் கிராமிய மற்றும் சிறுநகரக் கலப்புக் கலாசாரத்தையுடைய 16,451 மக்களைக் கொண்டதாக இருக்கின்றது. இங்குள்ள மக்கள் தரமான வாழ்க்கைப்பாணி, இயற்கையான மரபுவழி, அத்தியாவசிய சேவைகள், சாதகமான வளர்ச்சி மற்றும் பல நன்மைகளை அனுபவித்து வருகின்றனர்.

வடக்கு கரென்வில் மாநகரம் 'பசுமையும் வளர்ச்சியும் கொண்ட' ஒரு சமூகமாக உள்ளது. 416-ம் இலக்கப் பெரும்வீதியை அண்மித்திருக்கும் நிலத்தில் பல வித வதிவிட மற்றும் வர்த்தக அபிவிருத்தி வசதிகளை வழங்க வல்லதாக இது அமைந்து இருக்கின்றது. இந்த மாநகரத்தில், பசுமையான தூய ஆக்கபூர்வ வியாபார நடவடிக்கைகளுக்கு உகந்த மைய நகரநிலையமான கெம்ற்வில் (Kemptville) பகுதியில் வணிகத்துறைச் சொத்துக்கள் இருக்கின்றன. வடக்கு கரென்வில் மாநகரத்தில் குவெல்ப் சர்வகலாசாலையின் கெம்ட்வில் (Kemptville) வளாகம் மற்றும் பெர்கசன் (Ferguson) வனத்துறை நிலையம் ஆகியன அமைந்திருக்கின்றன. ஒன்ராறியோவில் அதிக சாதனை படைத்து வருகின்ற இரண்டு பாடசாலைகள், விரிவடைந்து மருத்துவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் கெம்ட்வில் மருத்துவமனை, தரமான பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் ஒரு புதிய வாசிகசாலை ஆகியனவும் இந்தப் பிராந்தியச் சமூகத்தில் இருக்கின்றனவோல்-மார்ட்(Wal-Mart), ஸ்ரேப்பில்ஸ், ஸ்கோசியா வங்கி (Scotiabank) ஆகியன பங்குபற்றும் கெம்ற்வில் கொலன்னாட் (Kemptville Colonnade) என்ற 300,000 சதுர-அடி பரப்பளவான சிறுவணிக அபிவிருத்திப்பணி, மாநில வீதி 43-ம் இலக்க ஸ்தலத்தில் இங்கு நிகழ்ந்து வருகின்றது. கொலன்னாட் நிறுவனம் சில்லறை விற்பனையில் எமக்கு வழங்கும்ஒரு சிறுவணிக வாய்ப்பு இதுவாகும். .

மொத்தச் சனத்தொகை: 16,451 (Statistics Canada Census 2016)
ஜனவரி மாதச் சராசரி வெப்பநிலை: -8 °C (27 °F)
யூலை மாதச் சராசரி வெப்பநிலை: 26 °C (70 °F)
வருடாந்த சராசரி மழைவீழ்ச்சி: 784 mm மழை, 198 cm பனி
தனியொருவர் வருமானம்: $104,421
சராசரி வீட்டு வருமானம்: $116,042
சராசரித் தொழிலின்மை வீதம்: 5-6 %
உயர் பாடசாலைக் கல்வி பெற்ற வயதுவந்தவர்கள்: 3,745
கல்லூரி அல்லது பல்கலைக்கழக டிப்புளோமாப் பட்டம் பெற்ற வயதுவந்தவர்கள்: 7,900
2 படுக்கை அறைகள் அடங்கிய அடுக்குமாடி வதிவிடத்தின் சராசரி மாதாந்த வாடகைச் செலவு: $1,155
சராசரி 3 படுக்கையறை விலகியிருப்பதாக மாளிகை: $369,847




மேலதிகத் தகவல்கள்:
Brian Carré, பிரதான நிருவாக உத்தியோகத்தர் வட க்குகிரென்வில்
P.O. Box 130, 285 County Road 44; Kemptville, ON K0G 1J0 Canada
613-258-9596 / bcarre@northgrenville.on.ca

Leeds Grenville where lifestyle grows good business
www.leedsgrenville.com
Leeds & Grenville IMMIGRATION PARTNERSHIP
www.NewcomersInfo.ca